24.0003

12 - 3 - 1993

SRI LANKA

(60)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவு (திருத்தச்) சட்டம்

---

*(1992, நவெம்பர் மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1992, நவெம்பர் மாதம் 13 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளிபிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : சதம் 45** தபாற் செலவு : ரூபா

## 1992 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவு (திருத்தச்) சட்டம்.

[1992, நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஒ.2/91

### 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1992 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(4) விடயத்திற்கேற்ப வேலையாள் ஒருவருக்கு அல்லது அவரது மரபுரிமையாளருக்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் பணிக்கொடையாகக் கொடுக்குமதியாயிருக்கும் ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவிருந்து உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அப்பணத்தொகையைச் செலுத்தத் தவறுகின்ற அல்லது தவணை தவறுகின்ற தொழில்தருநர் எவரும் பணிக்கொடையாகக் கொடுக்குமதியாயிருக்கும் பணத்தொகைக்கு மேலதிக அப்பணத்தொகைமீது பின்வரும் முறையில் கணிக்கப்பட்ட மிகைவரியொன்றையும், விடயத்துக்கேற்ப, அந்த வேலையாளுக்கு அல்லது அவரது மரபுரிமையாளர்களுக்குச் செலுத்துவதற்கு அவர் ஆளாதல் வேண்டும்:—

(அ) பணிக்கொடையின் கொடுப்பனவு உரிய தேதியிலிருந்து ஒரு மாதத்தை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு நிலுவையிலிருக்குமிடத்து பணிக்கொடை என்றவகையில் கொடுக்குமதியான பணத்தொகையின் பத்துச் சதவீத மிகைவரியொன்று;

(ஆ) பணிக்கொடையின் கொடுப்பனவு, உரிய தேதியிலிருந்து ஒரு மாதங்களை விஞ்சிய ஆனால் மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு நிலுவையிலிருக்குமிடத்து பணிக்கொடை என்ற வகையில் கொடுக்குமதியான பணத்தொகையின் பதினைந்து சதவீத மிகைவரியொன்று;

(இ) பணிக்கொடையின் கொடுப்பனவு உரிய தேதியிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சிய ஆனால் ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு நிலுவையிலிருக்குமிடத்து பணிக்கொடை என்ற வகையில் கொடுக்குமதியான பணத்தொகையின் இருபது சதவீத மிகைவரியொன்று;

2—ச.D 021999—1,395 (92/04)

(ஈ) பணிக்கொடையின் கொடுப்பனவு உரிய தேதியிலிருந்து ஆறு மாதங்களை விஞ்சிய ஆனால் பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத வொரு காலப்பகுதிக்கு நிலுவையிலிருக்குமிடத்து பணிக் கொடை என்ற வகையில் கொடுக்குமதியான பணத்தொகையின் இருபத்தைந்து சதவீத மிகைவரியொன்று;

(உ) பணிக்கொடையின் கொடுப்பனவு உரிய தேதியிலிருந்து பன்னி ரண்டு மாதங்களை விஞ்சியவொரு காலப்பகுதிக்கு நிலுவையி லிருக்குமிடத்து பணிக்கொடை என்ற வகையில் கொடுக்குமதி யான பணத்தொகையின் முப்பது சதவீத மிகைவரியொன்று.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக பணிக்கொடையொன்று தொடர் பாக, "உரிய தேதி" என்னும் சொல்லமைப்பு பணிக்கொடை எந்த வேலையாளுக்குச் செலுத்தப்படற்பாலதாகின்றதோ அந்த வேலை யாளின் சேவைகள் முடிவுறுத்தப்பட்ட தேதியிலிருந்து முப்பதாம் நாள் என்று பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அதன் (7) ஆம் உட் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(8) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "பணிக்கொடை" என்னும் சொல்லமைப்பு 5 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் மிகைவரி என்று பொருள்படும்.".

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ் வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண் டும்.